DEPOSITION OF WITNESS
(Chapter XXIII-Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF -CUM- JUDICIAL MAGISTRATE, KOTAGIRI

**<u>Case No. CC No. 01/2019</u>**

Deposition of Witness for Prosecution PW 2

| | | |
|---|---|---|
| Name | : | நடராஜ் |
| Father's Name | : | மூக்கன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of 16.09.2019

***<u>முதன்மை சாட்சியம்</u>*** *16.09.2019*

*நான் ஓரசோலையில் வசித்து வருகிறேன். நான் தாமஸ் பள்ளியில் வாட்ச்மேனாக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 13.08.2013ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் கோத்தகிரியில் இருந்து கட்டபெட்டுவை நோக்கி டீவிஎஸ் 50 வந்தது. பள்ளி அருகே டிவைடர் இருந்தது. அந்த ஸ்கூட்டியானது டிவைடர் அருகே வந்து டிவைடரில் அடித்து விழுந்தது. அவர் கீழே விழுந்தவுடன் கீழே விழுந்த நபருக்கு மூக்கிலும், வாயிலும் இரத்தம் வந்தது. அந்த சமயத்தில் மாருதி கார் ஒன்று கட்டபெட்டுவில் இருந்துகோத்தகிரி நோக்கி வந்தது. அப்பொழுது அந்த இடத்தில் எந்த வண்டியும் இல்லாததால் காரினை நிறுத்தி அடிப்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பிறகு என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. ஸ்கூட்டியை ஓட்டி வந்த நபருக்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.*

***(புலன் விசாரணை அதிகாரியிடம் கடந்த 14.08.2018ம் தேதி அளித்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது)***

**அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

*கடந்த 13.08.2018ம் தேதி தாமஸ் பள்ளி அருகே கார் வந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அந்த காரினை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார் என்றால்? ஆமாம். காரானது இரு சக்கர வாகனத்தின் மீது மோதவில்லை. கடந்த 13.08.2013ம் தேதி மாலை 05.30 மணியளவில் நீலகலர் மாருதி கார்* TN 43 B 2205 *கட்டபெட்டு என்ற இடத்தில்இருந்து கோத்தகிரி நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்ததாகவும், அந்த சமயத்தில் எதிரே வந்த* TN 43 H 4891 *என்ற இரு சக்கர வாகனத்தின் மீது காரானது மோதி விபத்து ஏற்படுத்தியதில் இரு சக்கர வாகனத்தில் வந்த நபருக்கு பலத்த காயம் ஏற்பட்டு விட்டதாகவும், பிறகு அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், சம்பவத்தை நேரில்பார்த்தாக விசாரணையில் சொல்லிவிட்டு எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல.*

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

*இல்லை*